# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 64/2021

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 06 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.4 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 06.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பாரிஜாதம் (PW–4) | வயது | : | 78/2025 |
| த/க பெயர் | : | திரு.அமிர்தம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | திருக்களர் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 14.08.2025ம் தேதியன்று நீர் வழக்கில் சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணை என்றால் சரிதான். அந்த அழைப்பாணையில் தாவா சொத்து குறித்த எந்தவித குறிப்புகளும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தின் சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் விவரங்களை என்னிடம் யார் சொன்னது என்றால் வி.ஏ.ஓ சொன்னார். இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணையை பெற்றுக்கொண்டு வி.ஏ.ஓ விடம் விசாரித்தேனா என்றால் ஆமாம். வாதியானவர் தனது குழந்தைகளின் படிப்பிற்காக திருச்சி, திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி போன்ற இடங்களில் தங்கியிருந்தார் என்றால் சரிதான்.
2) எனக்கு சொந்தமான சொத்து இருப்பதற்கான ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகில் என்ன சர்வே எண்ணில் சொத்து உள்ளது என்றால் சர்வே எண்.93, 94 சாகுபடி நிலம் உள்ளது. குடியிருப்பு பகுதிக்கு அருகில் விவசாயம் நிலம் எனக்கு இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குடும்ப வழக்கப்படி பாகப்பிரிவினை செய்து கொண்டதாக சொல்லியுள்ளதால் மொத்த சொத்துக்கள் எவ்வளவு அதன் சர்வே எண் என்ன யார் யாருக்கு எந்தெந்த சர்வே எண்ணில்

உள்ள சொத்துக்களை விஸ்தீரணம் குறிப்பிட்டு பாகப்பிரிவினை இருக்கும் என்றால் சரிதான்.

3) எனது சகோதரர் கையெழுத்திட்ட வா.சா.ஆ.10 ஆவணத்தில் எந்த சர்வே எண்ணும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதி, வாதியின் மகன்களுக்கும், பிரதிவாதிக்கும் பஞ்சாயத்தில் ஏற்பட்ட உடன்படிக்கை என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ஊரில் பஞ்சாயத்து செய்தால் அந்த ஊரிலுள்ள பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ–10 ஆவணத்தில் அதுபோன்ற குறிப்புகள் எதுவும் இல்லாமல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணமானது பஞ்சாயத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

4) தாவா சொத்தின் பட்டா, வீடு, மின் இணைப்பு ஆகியவை பிரதிவாதியின் பெயரில் இருப்பதாக வா.சா.ஆ.10 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், வீட்டிற்கு மூத்த மகன் என்ற முறையில் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டது. வா.சா.ஆ–10 ஆவணத்தில் உள்ளவாறு 29.12.2012 எந்தவித பஞ்சாயத்தும் ஏற்படவில்லை. அதில் பிரதிவாதி கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து முழுவதும் பிரதிவாதியின் அனுபோகத்தில் இருந்து வருகிறது என்றும், எனக்கு பிரதிவாதி மீது கொண்ட காழ்புணர்ச்சியின் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.12 10:14:09 +0530

District Munsif
Mannargudi.